சுருக்கம்

சிலை அமைத்தல் – விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம் மற்றும் நகரம் வார்டு டி, பிளாக்–14 நகரளவை எண் 84–ல் தேவர் பேரவைக்குச் சொந்தமான இடத்தில் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள கல்லினாலான முழுவுருவ தேவர் சிலையை அகற்றிவிட்டு, புதியதாக முழுவுருவ வெண்கலத்தினாலான பசும்பொன் முத்துராமலிங்க தேவர் சிலையினை நிறுவ அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி5) துறை

அரசாணை (நிலை) எண்.142 நாள்: 29.10.2007

மீண்டும் படிக்க:

1. அரசாணை நிலை எண்.221 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி5) துறை, நாள்.20.11.1999

மேலும் படிக்க

2.விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித எண்.ந.க.சி1/46646/07, நாள்.24.10.2007.

---

**ஆணை:**

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் மறவர் மகாஜன சங்கத் (தேவர் பேரவை) தலைவர் திரு.மு.செல்லையாத் தேவர் என்பவர், சாத்தூர் நகரம், வார்டு டி, பிளாக் 14, நகரளவை எண்.84ல், 0098.00 சதுர மீட்டர் நிலத்தில், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் அவர்களின் கற்சிலை அமைத்து சுமார் 32 வருடங்கள் ஆகிவிட்டதாலும், சிலை முன்பாக உள்ள ரோடும் உயரமாகிவிட்டதாலும், சிலை பள்ளத்திலிருப்பது போல் தோற்றம் ஏற்படுவதாலும் சிலைக்கு மேலே உள்ள மேற்கூரை, கோபுரம் மற்றும் தளம் ஆகியவை சிதிலமடைந்துவிட்டதாலும் மேற்கண்ட கற்சிலையை அகற்றிவிட்டு அதற்கு பதிலாக அதே இடத்தில் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் அவர்களின் முழுவுருவ வெண்கலச்சிலையை அமைக்க அனுமதி வழங்கும்படி விருதுநகர் மாவட்ட ஆட்சியரிடம் கோரியுள்ளார்.

2. சாத்தூர் நகர்மன்றம் தனது தீர்மானம் எண். 229, நாள். 22.10.2007–ல் மேற்படி இடத்தில் நிறுவியுள்ள பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் அவர்களின் கற்சிலைக்குப் பதிலாக முழுவுருவ வெண்கலச் சிலை அமைக்க அரசின் அனுமதி கோரலாம் என தீர்மானம்

நிறைவேற்றியுள்ளது. மேலும் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் அவர்களின் முழுவுருவ வெண்கலச்சிலை அமைக்கப்படுவதில் பொதுமக்களிடமிருந்து ஆட்சேபனை ஏதும் வரப்பெறவில்லை என சாத்தூர் வட்டாட்சியரும், இச்சிலை அமைக்கப்படுவதால், சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சினை ஏதும் நிகழ வாய்ப்பில்லை என விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களும் தெரிவித்துள்ள நிலையில், திரு.மு.செல்லையாத் தேவர் என்பவருக்கு சிலை அமைக்க அனுமதி வழங்கலாம் என விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. மேற்கூறிய சூழ்நிலையில் விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம் மற்றும் நகரம் வார்டு டி, பிளாக் 14, நகரளவை எண்84–ல் தேவர் பேரவைக்குச் சொந்தமான இடத்தில், ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள கல்லினாலான முழுவுருவ தேவர் சிலையை அகற்றிவிட்டு, அவ்விடத்தில் புதிதாக முழுவுருவ வெண்கலத்தினாலான தேவர் சிலையினை ஓராண்டு காலத்திற்குள் நிறுவ, பார்வை 1ல் படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, பராமரிப்புச் செலவு மற்றும் பாதுகாப்பு பொறுப்பினை சிலை அமைப்புக் குழுவினரே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, சாத்தூர் மறவர் மகாஜன சங்கத் (தேவர் பேரவை) தலைவர் திரு.மு.செல்லையாத் தேவர் என்பவருக்கு, மேற்படி இடத்தில், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் முழுவுருவ வெண்கலச் சிலையை அமைக்க, அனுமதி அளித்து அவ்வாறே அரசு இவண் ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே.தீனபந்து,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர் மாவட்டம், விருதுநகர்
திரு.திரு.மு.செல்லையாத் தேவர்,
தலைவர், சாத்தூர் மறவர் மகாஜன சங்கம் (தேவர் பேரவை)
சாத்தூர், விருதுநகர் மாவட்டம்.

நகல்

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 600 005.
நகராட்சி ஆணையாளர், சாத்தூர் நகராட்சி, விருதுநகர் மாவட்டம்.
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை – 600 009
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை – 600 009
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.ந.மு.2)துறை, சென்னை – 600 009.
இருப்புக்கோப்பு/உதிரி நகல்கள்.

//ஆணைப்படி// அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 29/10/0